மாண்புமிகு திரு, ச, இராமச்சந்திரன் :

(அ) 1,682 பேர்,

(ஆ) 109 பேர்,

(இ) இல்லை,

(ஈ) கேள்விக்கு இடமில்லை,

திரு, என், வரதராஜன் : தலைவரவர்களே. இவ்வாறு அப்ரண்டிஸாக சேர்த்து ஆயிரம் பேருக்கு மேல் இன்றைக்கு வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்று அறியப்படுகிறதே அவர்கள் அனைவருக்கும் விரைவில் வேலை கிடைக்கும் முயற்சியை மின் துறை எடுக்குமா என அறியவிரும்புகிறேன்,

மாண்புமிகு திரு, ச, இராமச்சந்திரன் : வேலைக்கான பயிற்சிதான் மின் வாரியத்தில் அளிக்கப்படுகிறது, வேலை காலி ஏற்பட்டால்தான் இவைகளையெல்லாம் மின் வாரியம் கவனிக்க முடியும், இவர்களுக்கு வேலை தேடுகின்ற நிறுவனமாக மின் வாரியம் இல்லை,

திரு, வி.கே. கோதண்டராமன் : சார். 3 ஆண்டுகள் முடிந்த உடனே கட்டயமாக வெளியே அனுப்பி விடவேண்டுமென்று அரசு ஆணையிட்டுள்ளதா? அப்படியானால். இது வேலையில்லா திண்டாட்டத்தைப் போக்கும் வழியா என்பதை உணர்ந்து மீண்டும் அவர்களே தொடர்ந்து வேலை செய்வதற்கு அதே துறையிலேயோ அல்லது வேறு எந்தத் துறையிலேயோ வேலை செய்வதற்கு அனுமதிக்கப்படுமா என அறியவிரும்புகிறேன்,

மாண்புமிகு திரு, ச, இராமச்சந்திரன் : தலைவரவர்களே. இதன் நோக்கம் வேலையில்லா திண்டாட்டத்தைப் போக்குவது அல்ல, வேலையைத் தெரிந்துகொள்வதற்குப் பயிற்சி அளிப்பது, ஓராண்டிலேயிருந்து 3 ஆண்டுகள் வரை அத்தகைய பயிற்சி அளிக்கப்படுகிறது, பயிற்சி முடிந்த உடன் வெளியே அனுப்பப்படுகிறார்கள்,

வயிரம்பேட்டையில் தெரு விளக்குகள்,

*வினா எண், 180—திரு, டி, ஆர், இராசாராம் ரெட்டி : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) திண்டிவனம் தொகுதி இடையாளம் ஊராட்சி வயிரம் பேட்டையில் தெரு விளக்குகள் போட மின் துறையினரால் 1972-ல் கம்பங்கள் நட்டும் ஒயர் இழுக்கப்படவில்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில். அதற்கான காரணம் என்ன?

1979 பிப்ரவரி 26]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ) இல்லை,

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை,

சென்னை நகரில் மாணவர்களுக்கு விடுதிகள்.

*வினா எண் 181—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகரில் கல்வி பயிலும் மாணவர்கள் விடுதிகளில் தங்கி படிக்க விரும்பும் மாணவர்கள் அனைவருக்கும் தங்கும் விடுதிகள் அமைத்துத்தரும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :

தற்பொழுது சென்னை நகரில் கல்விப் பயிலும் மாணவர்களுக்கு போதிய விடுதி வசதிகள் ஏற்கனவே உள்ளதால் தனியாக விடுதி கட்டுவதற்கு ஏதும் செயற்குறிப்பு பரிசீலனையில் இல்லை.

திரு. துரை கலியமூர்த்தி : பேரவைத் தலைவரவர்களே, சென்னையில் கல்வி பயிலும் மாணவர்களில் இன்னும் ஹாஸ்டல் வசதி கிடைக்காதவர்கள் எத்தனை பேர் உள்ளனர் என்பதை அறிய விரும்புகிறேன். அடுத்து, 92 TNER ரூல்படி Backward and Most Backward உதவித் தொகை, ஹாஸ்டலில் தங்கிப் படிப்பவர்களில் இன்னும் எவ்வளவு பேர்களுக்கு கிடைக்க வேண்டியுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : சென்னையிலுள்ள அரசாங்கக் கல்லூரிகளில் போதுமான விடுதி வசதிகள் உள்ளன என்கின்ற விவரத்தைத் தந்திருக்கிறார்கள். மற்ற, இரண்டாவது கேட்ட கேள்விக்கு விவரம் என்னிடத்திலே இல்லை. தனியாகக் கேட்கவும்.

(சில உறுப்பினர்கள் கையைத் தூக்கிக் கொண்டிருந்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சென்னை நகரத்தை ஒட்டிய கேள்வி இது. ஆகவே, வினா எண். 182.....